## IN THE COURT OF THE PRINCIPAL SUB JUDGE, KARUR

| | |
|---|---|
| அசல் வழக்கு எண் | 861/2019 |
| நாள் | 04.06.2025 |
| வா.சா.1 | கார்த்திகேயன் |
| வயது | 40 |
| ஊர் | கரூர் |

சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக அனுமதி வழங்கப்பட்டது.

**2 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

பிரதிவாதி நிறுவனம் ஆரம்பித்த நாள்முதலே பிரதிவாதி நிறுவனத்தை பற்றி தெரியும். 2016 ம் வருடம் பிரதிவாதி நிறுவனம் கலைக்கப்பட்டதாக தெரிவித்தார்கள். ஆனால் தற்போது வரை பிரதிவாதி நிறுவனம் நடைபெற்றுக்கொண்டுதான் வருகிறது. பிரதிவாதி நிறுவனத்தைச்சேர்ந்த பதிவு சான்றிதழ், கூட்டாண்மை உடன்படிக்கை பத்திரம் ஆகியவற்றை தாக்கல் செய்துள்ளேன். மேற்படி பிரதிவாதி நிறுவனத்தில் 1. வெங்கடேசன் 2. பாலாஜி 3. நந்தகுமார் ஆகியோர் பங்குதாரர்களாக உள்ளார்கள். பிரதிவாதி நிறுவனத்தில் பங்குதாராக உள்ள வெங்கடேசன் என்பவர் தான் என்னிடத்தில் நிறுவனத்தின் சார்பாக கடன் வாங்கினார். பிரதிவாதியால் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் உள்ள சங்கதிகளை நான் தெரிந்து கொண்டேன். 6 வது பிரதிவாதி இவ்வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பாகவே சாட்சி சுப்பிரமணி, சேகர், சாந்தி, பாலசுப்பிரமணி ஆகியோர்கள் மீது ஆவணங்களை மோசடியாக தயார் செய்ததாக கரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் அளித்திருந்தார் என்றால் சரிதான். அந்த புகாரை தாக்கல் செய்தததை பின்னிட்டு தான் அசல் வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் நான் சட்ட அறிவிப்பு அனுப்பினேன். அந்த சட்ட அறிவிப்பை அவர்கள் பெற்றுக்கொள்ளவில்லை. அதன்பின்னிட்டு அசல் வழகககை தாக்கல் செய்தேன். நான் சட்ட அறிவிப்பை பிரதிவாதிகளின்

வீட்டிற்கும், நிறுவனத்திற்கும் அனுப்பினேன். நான் நிறுவனத்திற்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு திருப்பபட்டதற்கான காரணம் அந்த மாதிரி நிறுவனமே நடைபெறவில்லை என்று காரணம் கூறி தான் அறிவிப்பு திருப்பபட்டது என்றால் சரிதான். எனக்கும், பிரதிவாதி நிறுவனத்திற்கும் ஏற்கனவே வரவு செலவு இருந்ததா என்றால் இல்லை. பிரதிவாதி நிறுவனத்தை பற்றி வெங்கடேசன் என்பவரின் தந்தையின் மூலமாகவும், பாலாஜி என்பவரின் தந்தையின் மூலமாகவும் எனக்கு தெரியும். பிரதிவாதி நிறுவனத்தை பற்றியும், பிரதிவாதிகளை பற்றியும் எனக்கு எதுவும் தெரியாது என்றும், என்னுடைய நெருங்கிய நண்பர் சேகர் என்பவரின் துண்டுதலின் பேரில் நான் அசல் வழக்கை பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சேகர் என்பவரை எனக்கு தெரியும். சேகர் என்பவரின்தாய்மாமா வா.சா.2 சுப்பிரமணி என்றால் சரிதான். சேகர் தாக்கல் செய்த வழக்குகளில் நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். அதே போல், வா.சா.2 சுப்பிரமணி என்பவர் சேகர் தாக்கல் செய்த வழக்குகளில் சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரிதான். 2019ம் வருடம் வா.சா.2 சுப்பிரமணியம் 6வது பிரதிவாதி சொத்தை கிரயம் பெற்றார் என்றால் சரிதான். கடந்த 04.06.2019ந் தேதியன்று வா.சா.2 6வது பிரதிவாதியிடமிருந்து சொத்தை கிரயம் பெற்றார் என்றும் , அதில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். என்னிடத்தில் காண்பிக்கப்படும் கிரய ஆவணத்தில் 6வது பிரதிவாதியிடமிருந்து வாங்கிய கிரயம் ஆவணம் என்றால் சரிதான். அந்தகிரய ஆவணத்தின் சான்றிட்ட நகல் பி.த.சா.ஆ.1 ஆகும். பிரதிவாதி கடந்த 03.11.2017ந் தேதியன்று என்னிடம் கடன் பெற்றார். 6வது பிரதிவாதி 2019ம் வருடம் சொத்தை கிரயம் கொடுத்தவுடன் என்னுடைய கடன் தொகையை நான் அவரிடம் கேட்டேனா என்றால் கேட்டேன். வேறு ஒருஇடம் இருப்பதாகவும் அதை விற்பனை செய்யும் போது தொகையை கொடுப்பதாக கூறினார். அசல் வழககை தாக்கல் செய்த போது, 6வதுபிரதிவாதி பெயரில் உள்ள சொத்தை தான் தீர்ப்புக்கு முன் பற்றுகை செய்ய வேண்டி மனுதாக்கல் செய்திருந்தேன் என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிகளுக்கு நாள் ஒன்றுக்கு 5

பைசா வட்டி என்று கூறி கடன் கொடுத்தேன். நான் சுருக்கு வழக்கு எண் 93/2020 சாட்சியம் அளித்த போது, 2019ம் வருடம் நான் கடன் கொடுத்த ரூ.5,00,000/-த்திற்கு 1.50 பைசா வட்டி கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த சுருக்க வழக்கு எண் 93/2020ல் வா.சா.1 ஒப்புக்கொண்ட பகுதி பி.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சாட்சி அந்த வழக்கு வேறு என்றும், இவ்வழககிற்கும் அந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சாட்சியம் அளித்தது பதிவு செய்யப்பட்டது. 6வது பிரதிவாதிக்க பாத்தியப்பட்ட வேறு சொத்தை கிரயம் கொடுத்த போது நான் சாட்சி கையொப்பம் செய்யவில்லை. 6வது பிரதிவாதிக்க பாத்தியப்பட்ட வேறு சொத்து கிரயம் ஆன விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அந்த சொத்து எனது நண்பரான சேகர் என்பவரின் உறவினர் பெயரில் தான் கிரயம் பெறப்பட்டது என்று சொன்னால் அதை பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் தனிப்பட்ட முறையில் என்னிடம் கடன் பெறவில்லை. பிரதிவாதிகள் நான் கடன் கொடுத்த தேதிக்கு 2 நாட்களுக்கு முன்பாக என்னிடம் கடன் கேட்டார்கள். பிரதிவாதிகள் நடத்தி வந்த நிறுவனத்தின் தேவைக்காக தான் கடன் கேட்டார்கள். பிரதிவாதிகள் கடன் கேட்டு என் வீட்டிற்கு வந்த போது, நான் மட்டும் தான் இருந்தேன். 2வதுபிரதிவாதி வெங்கடேசன் என் வீட்டிற்கு காலை 7.00 மணிக்கும், சுப்பிரமணி என்பவர் காலை 7.30 மணிக்கும் என் வீட்டிற்கு வந்தார்கள். 2வது பிரதிவாதி வெங்கடேசன் என் வீட்டிற்கு வந்த போது, பாண்டும் நிறுவனத்தின் முத்திரையும் கொண்டு வந்தார். 2வது பிரதிவாதி என்னிடம் கடன் கேட்க வந்த போது, நிறுவனத்தின் மற்ற பங்குதாரர்களிடம் 2து பிரதிவாதி கடன் கேட்டு வந்துள்ள விவரத்தை தெரிவித்தேனா என்றால் தொலைபேசி மூலமாக அவர்களுக்கு தெரிவித்தேன். சுப்பிரமணியம் என்பவர் நானும், 2வது பிரதிவாதியும் குறிப்பிட்ட சங்கதிகளை ஒரு வெள்ளைத்தாளில் குறிப்பெடுத்து கொண்டு பின்னிட்டு பாண்டு பத்திரத்தை பூர்த்தி செய்தார். நான் பைனான்ஸ் தொழில் செய்து வருகிறேன்.என்னுடைய வரவு செலவுஅனைத்தும வங்கியின் மூலமாக செய்து வருகிறேனா என்றால் இல்லை.

எனக்கு வங்கி கணக்கு உள்ளது. நான் பிரதிவாதிக்கு கொடுத்ததாக கூறப்படும் ரூ.5,00,000/- தொகை எனக்கு எவ்வாறு கிடைக்கப்பெற்றது என்று சொன்னால் துணி வியாபாரம் செய்ததில் இருந்து கிடைக்கபெற்றதாகும். எனக்கு மாதம் தொழில் செலவுகள் போக ரூ.40,000 வரை வருமானம் வரும். என்னுடைய மாத வருமானத்தை காட்டும் வகையில் ஆவணம் எதையும் நான் தாக்கல்ெ சய்யவில்லை என்றால் சரிதான். நான் வருமான வரி செலுத்தவில்லை. எனக்கு வருமான வரி கணக்கிற்குண்டான அடையான அட்டை உள்ளது. நான் கடன் கொடுத்ததாக கூறப்படும் ரூ.5,00,000 த்தை வங்கியின் மூலமாக எடுத்தேனா அல்லது கையிருப்பில் வைத்திருந்தேனா என்றால் கையிருப்பில் தான் வைத்திருந்தேன். நான் பிரதிவாதிக்கு கடன் தொகை எதுவும் கொடுக்கவில்லை என்றும், கடன் கொடுத்தாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி நிறுவனத்தின் முத்திரையை நானும், சேகர் என்பவரும், அவரது மனைவி, சுப்பிரமணி மற்றும் பாலசுப்பிரமணி ஆகீயோர் கூட்டாக சேர்ந்த மோசடியாக தயார் செய்து வா.தசா.ஆ.1 ஆவணத்தில் பதித்துள்ளோம் என்றால் சரியல்ல. 6 வது பிரதிவாதியின் கணவர் பாலாஜி மற்றும் வெங்கடேசன் ஆகியோர் கையொப்பம் மட்டும் செய்து கடனுறுதிச்சீட்டு, காசோலையும் மற்றும் கையொப்பம் மட்டும் செய்த வெற்றுத்தாள்களையும் சேகர் என்பவரிடம் கொடுத்ததாக புகார் அளித்திருந்தார் என்றால் சரியல்ல. சேகர் என்பவரிடம் வாங்கிய கடன் தொகையை பிரதிவாதிகள் திருப்பி செலுத்திவிட்டார்கள் என்றும், பிரதிவாதிகள் சேகர் என்பவரிடம் கொடுத்துவைத்திருந்த பொறுப்புறுதி ஆவணங்களை திருப்பி கேட்ட போது அவர் பிறகு தருவதாக கூறினார் என்றும், பின்னிட்டு பிரதிவாதிகள் பொறுப்புறுதிக்காக கொடுத்து வைத்திருந்த ஆவணங்களை பூர்த்தி செய்து என் மூலமாக அசல் வழககை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. நானும், சேகர் என்பவரும் கூட்டாக சேர்ந்து பிரதிவாதிகளிடம் பணம் பறிக்க வேண்டும் என்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்தோம் என்றால் சரியல்ல. அதனால் தான் பிரதிவாதிகளால் என் மீது காவல்துறையில் புகார்

கொடுக்கவில்லை குற்ற நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. எனக்கும், பிரதிவாதிகளுக்கும் கடன் கொடுத்தவர், கடன வாங்கியவர் என்ற உறவுமுறை இல்லை என்று சொன்னால் சரியல்ல. ஆகவே, அசல் வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. மறுவிசாரணை இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்
கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.
ஒ/ம். திரு. வேடியப்பன்
முதன்மை சார்பு நீதிபதி,
கரூர்.